11.02.2026

அ.வ.எண். 86/2020

வா.சா.1 ஹக்கீம் ராஜா குறுக்கு விசாரணை

1. தாவாசொத்தை பொறுத்து நான் மாண்புமிகு செங்கல்பட்டு, கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். நான் மேற்சொன்ன வழக்கை ஏற்றுதல் ஆற்றுதல் பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான், அந்த வழக்கில் தாவாசொத்தை பிரதிவாதிகள் மூலம் கிரையம் பெற்ற நபர்களையும் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். தாவாசொத்தில் உள்ள வீட்டு மனைகளை சுமாராக 100 வீட்டு மனைகள் விற்கபட்டிருக்கும் என்றால் வில்லங்கம் பார்த்தால்தான் தெரியும். கிரையம் பெற்ற நபர்கள் தங்களின் பெயரில் பட்டா மாற்றி வருகின்றார்கள் என்றால் எனக்கு தெரியாது.

2. அந்த வீட்டு மனைகளை கிரையம் பெற்ற நபர்கள் யார் யார் அனுபவத்தில் உள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் நான் விற்பனை செய்த நபர்களின் விவரம் மட்டும் தெரியும், மற்றவர்களை பொறுத்து எனக்கு தெரியாது, அவர்களை பொறுத்து நான் புகார் எதுவும் காவல்நிலையத்தில் கொடுத்தேனா என்றால் இல்லை, நான் நீதிமன்றத்தில் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி மூலம் கிரையம் பெற்ற நபர்கள் தாவாசொத்தில் வீடு கட்டி விட்டார்களா என்றால் கட்டிவிட்டார்கள், ஆனால் அவர்கள் யார் என்று தெரியாது. எந்த நீதிமன்றத்திலும் வீடுகளை

இடிக்க வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாசொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதியிடமிருந்து இரண்டு முறை கிரைய ஒப்பந்தம் செய்தேனா என்றால் சரிதான், 2015ம் வருடம் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது, அதன்பின்பு 2017ம் வருடம் மேற்சொன்ன 2015ம் வருடம் ஒப்பந்தத்தை குறிப்பிட்டு ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டோம்.

3. மாண்புமிகு செங்கல்பட்டு கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின் பிராதில் நான் தாவாசொத்தில் அனுபவத்தில் இருப்பதாக சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 கிரைய உடன்படிக்கைக்கு பிறகு நான் அதில் கூறியவாறு மீத கிரைய தொகையை சரியான நேரத்தில் கொடுக்காததால் அந்த கிரைய உடன்படிக்கை செல்லாது என்றால் சரியல்ல, அந்த வா.சா.ஆ.1 யை பெற்ற பிறகுதான் புதுபித்து வா.சா.ஆ.2 பெறபட்டது. வா.சா.ஆ.2ன்படி மீத கிரைய தொகையை நான் கொடுக்காததால் அந்த ஆவணம் செல்லுபடி ஆகாது என்றால் சரியல்ல. 2015ம் வருடத்திலிருந்து இன்றைய தேதிவரை எனக்கு வா.சா.ஆ.1ல் சொல்லியுள்ள கிரைய தொகையை கொடுப்பதற்கு தகுந்த பண வசதி இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய பண வசதியை காண்பிக்க வங்கி கணக்கு புத்தகம் மற்றும் சொத்தின் விவரம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)